Rigistered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 20 வெள்ளிக்கிழமை (02-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 126

# 6 'புளொட்' உறுப்பினர்கள் நொச்சிமோட்டையில் பலி!

## புலிகள் அதிரடித் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

வவுனியா—நொச்சிமோட்டையில் நேற்றுக் காலை 8-30 மணியளவில் விடுதலைப் புலிகள், புளொட் தேசவிரோதிகள் மீது அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இந்தச் சம்பவத்தில் 6 புளொட் தேசவிரோதிகள் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். தேசவிரோதி ஒருவரின் சடலமும் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மூலம் தெரியவருவதாவது:- நொச்சிமோட்டை காவல் அரணில் இருந்து புளொட் தேசவிரோதிகள் நூறு யார் முன்னால் வந்து நிலை எடுத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் கோஷ்டி மோதல்; 8 தமிழ் இளைஞர்கள் கைது!

கனடாவில் ரொறொண்டோப் பகுதியில் உள்ள ஸ்காபரோ என்ற இடத்தில் ஆயுதந் தரித்த இரு இலங்கைத் தமிழ்க் கோஷ்டிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக எட்டுத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இம்மோதலின் போது காயமடைந்தவர்கள் ஸ்காபரோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரைமணித்தியாலமாக இரு கோஷ்டிகளும் மோதிக் கொண்டன; இந்தமோதலின் போது கனேடியர்கள் உட்பட பலர் காயமடைந்தனர். பொலீஸார் அந்த இடத்துக்கு விரைந்து சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். சம்பவம் நடந்த இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆறு கார்கள் சேதமடைந்தன.

தமிழ்க் கலாசார நிகழ்ச்சி ஒன்று தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாடே இம் மோதலுக்கு காரணம் என்று கூறப்படுகிறது. அருகே உள்ள மதுபானச்சாலையின் கண்ணாடி யன்னல்களை தோட்டாக்கள் துளைத்துச் சென்ற போது அங்கிருந்தவர்கள் சிதறி ஓடினார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மோதலில் ஈடுபட்டவர்கள் இரு ஊர்களைச் சேர்ந்த கோஷ்டிகள் என்று கூறப்படுகின்றது. (த-எ)

## வழிப்போக்கர் மீது நேற்று முட்டாள் தின அட்டகாசம்!

யாழ்ப்பாணம், ஏப். 2

ஏப்ரல் முட்டாள் தினத்தைக் கொண்டாடுவதாகக் கூறிக்கொண்டு இளைஞர் கோஷ்டிகள் சில நேற்று யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் ''அட்டகாசம்'' புரிந்தன.

இக்கோஷ்டிகள் வீதிகளால் சென்ற பாடசாலை மாணவர்கள் மீதும், வழிப்போக்கர்கள் மீதும் கோழிச் சாயம், எழுதும் மை, பெயின்ட் வகைகள், சாணத் தண்ணீர், கூழ் முட்டைகள், அழுகிய தக்காளிப்பழம் ஆகியவற்றை வீசி அவர்களைத் துன்புறுத்தினர்.

இதனால் வீதிகளால் பயணம் செய்த பலரும், ஆண் பெண் பால் வேறுபாடின்றியும் வயது வேறுபாடின்றியும் ஆடைகள் அலங்கோலப்பட்டு இருக்கக் காணப்பட்டனர்.

பாடசாலைகளில் மாணவர்கள் மட்டத்தில் மை தெளித்தல் போன்ற சம்பவங்கள் நடந்தபோதிலும், அவர்கள் பாடசாலைக்குச் செல்லும் வழியிலும், திரும்பும் வழியிலும் வெளியார் கோஷ்டிகளால் வர்ணங்களும், அழுக்குகளும் வீசப்பட்டு அவலட்சணப் படுத்தப்பட்டனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

### 'குமண'வில் பரீட்சை முடிவுகள்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு முன்னதாக 'குமண' கப்பல் நாளை சனிக்கிழமை — பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளும் எடுத்துவரப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

### பத்திரிகையாளர் மீது தாக்கு

## பொலீஸ் அதிகாரி கட்டாய லீவில்

கொழும்பு, ஏப். 2

கொழும்பு கொம்பனித் தெருவில் கடந்த டிசம்பர் 10 ஆம் திகதி நடந்த சத்தியாக்கிரகத்தின் போது செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்குப் பொறுப்பான கொம்பனித்தெரு பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி தர்மசேன கருணாரத்தினா நேற்று முதல் கட்டாய லீவில் அனுப்பப்பட்டிருக்கிறார்.

இது தொடர்பாக விசாரணை [illegible] ரியடர் டி அல்விஸ் தலைமையிலான நீதிநபர் குழு ஒன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 2 முஸ்லிம் மீனவர்கள் முல்லைத்தீவிலும் விடுதலை

யாழ்ப்பாணம், ஏப். 2

திருகோணமலை - புல்மோட்டையைச் சேர்ந்த இரு முஸ்லிம் மீனவர்களை விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மனிதாபிமான முறையில் விடுதலை செய்தனர்

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பிரதிநிதி மாரியான கொறராத்தியிடம் இவர்கள் இருவரும் ஒப்படைக்கப்பட்டனர்.

புல்மோட்டையைச் சேர்ந்த அலியார் லெப்பை இராசமுகமட் (26 வயது), மூத்தலிப் மனாப் (26 வயது) ஆகிய இரு மீனவர்களுமே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு கடற்கரைப் பகுதியை வந்தடைந்த இரு

### மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

இது வரை காலமும் தமிழீழ மீட்பு நிதியைச் செலுத்தத் தவறியவர்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 3 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் தமது மீட்பு நிதிக் கட்டணைச் செலுத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ)

### புதுவருடத்தை முன்னிட்டு

## பங்கீட்டு அட்டை இன்றி உணவு பொருள் விநியோகம்

புத்தாண்டுக்கு மக்களுக்குப் போதிய உணவுப் பொருள்கள் கிடைக்கக் கூடியதாக, அவற்றை பங்கீட்டு அட்டைக்கு அல்லாமல் தாராளமாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருள்களை ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாகக் கட்டுப்பாடின்றித் தாராளமாக விநியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

கப்பல்களில் எடுத்துவரப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பங்கீட்டு அட்டை முறையிலன்றி தாராளமாக வழங்குவதற்கு ஓரளவு போதும் என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

பங்கீட்டு அட்டைக்கின்றித் தாராளமாக விநியோகிக்கப்பட உள்ள உணவுப் பொருள்கள் புதிய கட்டுப்பாட்டு விலைகளுக்கு விற்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

### கிளாலி படகுச் சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ)

### அதிக பொருள்களை கையாள்வதற்கு

## பரு. இறங்குதுறை புனரமைக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 2

பருத்தித்துறை துறைமுகத்தில் இப்போது புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்போது கையாளப்படும் பொருள்களை விட அதிக பொருள்களை இறக்குவதற்காகவே இந்தப் புனரமைப்பு வேலைகள் நடைபெறுவதாக அறிய வந்தது.

இழுவைப் படகில் இருந்து பொருள்களை துரிதமாக லொறிகளில் ஏற்ற வசதியாக விசேட மேடை அமைக்கப்பட்டுவருவதாகவும்—

மேடை அமைக்கப்பட்டதும் மூன்று லொறிகளில் ஒரே நேரத்தில் பொருள்களை இறக்க முடியும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

மேடை அமைக்கும் வேலைகளுக்கு கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்ட சிமெந்து பயன்படுத்தப்படுகிறது.

கூடுதல் எண்ணிக்கையான இழுவைப் படகுகளை நிறுத்த வசதியாக துறைமுக இறங்குதுறை புனரமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### கம்பன் விழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப் 2

அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் நடத்தும் ஐந்து நாள் கம்பன் விழா இன்று மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகிறது. நல்லூர் கந்தசுவாமி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப் பரீட்சைகளுக்கு அடையாள அட்டை அவசியம்

## கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 2

பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் — பாடசாலை பரீட்சார்த்திகள் உட்பட — அனைவரும் பரீட்சை எழுதும்போது தமது அடையாளத்தை நிரூபித்தல் அவசியமாகும்.

தங்கள் அடையாளத்தை நிரூபிக்க ஏற்றவகையில் தபால் அட்டையை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வதற்கு முன்கூட்டியே விண்ணப்பிக்கும்படி பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

பரீட்சார்த்திகள் செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு அல்லது தபால் திணைக்கள அடையாள அட்டை போன்ற பரீட்சை ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஒன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். (ஒ)


உ

அத்தியடி

**ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப்பிள்ளையார் கோவில்**

'மகர யாழ் விருது' பெறும் மக்கள் தொண்டன், மருத்துவ மா மேதை

**சபா. சிவகுமாரனை**

வாழ்த்துகிறோம்.

'மகர யாழ். விருது' அளிக்கும் கம்பன் சழகத்தாரின் அரும் செயலைப் பாராட்டுகின்றோம்.

— நிர்வாகசபை.

(25046)



**'மகர யாழ்' விருது பெறும்....**

மத்திய கல்லூரியின் மாசற்ற மாணிக்கமே!
அத்தியடி வாழ் அருங்குண சீலனே!
உத்தம சேவைக்கு உதாரணமானவனே!
வித்தக மருத்துவ மேதாவிலாசனே!
வைத்திய கலாநிதி சபா சிவகுமாரனே!

வாழ்க நீ, வளர்க நின்பணி!

-அத்தியடி வாழ் மத்திய கல்லூரி முன்னாள் மாணவர்கள்.

(சி/4725)



LUXINTENEBRIS

**JAFFNA ENGLISH ACADEMY**

**ENGLISH TUTORS - IN - CHARGE**

Applications are invited from competent persons of either Sex for the above posts. Candidates must be suitably qualified and experienced Teachers of English OR must have high Competency and aptitude for Teaching spoken and written English. The Tutors-In-Charge will work according to the scheme prepared by us and also be responsible for training the Students upto the levels specified by us. The selected candidates would be entitled to remunerations commensurating with their qualifications and experiences.

Formal applications with complete bio-data may be sent to us for our perusal. No personal intimations will be sent for interviews.

All candidates please call over personally at 10 a.m. on 10-04-1993 for an interview.

— DIRECTOR OF STUDIES.

9, Rakka Lane,
Chundikuli,
Jaffna.

(C-4859)



**நன்றி நவிலல்**

**ஞா. வில்சன் நிக்கலஸ்**

எமது மருத்துவ பீட மாணவன்

அமரர் ஞா. வில்சன் நிக்கலஸ் அவர்களுக்கு

அஞ்சலி செலுத்தி இறுதி ஊர்வலத்திலும் அதைத் தொடர்ந்த நிகழ்வுகளிலும் கலந்து கொண்டவர்களுக்கும், இக்கட்டான இந் நேரத்திலும் எமக்கு தோள் கொடுத்துதவி புரிந்தவர்களுக்கும், ஆறாத் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கும், எமக்கும் அனுதாபம் தெரிவித்து மடல்கள் அனுப்பியவர்களுக்கும் ஆறுதலளித்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள் பல.

மருத்துவ மாணவர் ஒன்றியம்
M. S. U.

(25057)


## பாடசாலைகளில்

கொடிகாமம் மந்துவில் அ.த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வ. த. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும். (இ-117)

## உச்சியில் சூரியன்

கொழும்பு, ஏப். 2

எதிர்வரும் புதன்கிழமை நண்பகல் 12.13 மணியளவில் கொழும்பில் சூரியன் நடு உச்சியில் நிற்கும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்திருக்கிறது. (த-எ)

## வவுனியாவுக்கு ம.எண்ணெய்

கொழும்பு, ஏப். 2

வவுனியாவுக்கு போதியளவு மண் எண்ணெய் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புனர்நிர்மாண, புனர்வாழ்வு சமூக நலத்துறை அமைச்சுச் செயலாளர் கிறிஸ்டி சில்வா முன்கண்ட தகவலை நேற்று வெளியிட்டார்.

நிலைமையை மதிப்பீடு செய்வதற்காக திரு. கிறிஸ்டி சில்வா அடுத்த வாரம் வவுனியாவுக்கு செல்லவிருக்கிறார். (ஓ-எ)

## மாணவர் முத்திரைக்கு பொருள்கள்

யாழ்ப்பாணம், ஏப். 2

1992 அக்டோபர், நவம்பர் டிசம்பர் மாதங்களுக்குரிய மாணவ முத்திரைக்கான பொருள்கள் இம்மாதம் 5ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை ப.நோ.கூ. சங்கங்களில் வழங்கப்பட உள்ளன.

5-ஆம், 6 ஆம் திகதிகளில் முழு நாளும் அதன் பின்னர் பிற்பகல் நேரங்களிலும் பொருள்கள் விநியோகிக்கப் படும்.

அக்டோபர் மாத மாணவ முத்திரைக்கு கால் கிலோ பனை வெல்லமும் மிகுதிக்கு சீனியும் வழங்கப்படும்.

நவம்பர், டிசம்பர் மாத முத்திரைக்கு ஒரு ஹைலண்ட் மா பைக்கெட்டும் மிகுதிக்கு பயறு, பட்டாணிப் பருப்பும் வழங்கப்படும். (இ)

## பலிக்களம்

குருநகர், ஏப். 2

இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகளை விளக்கும் பலிக்களம் இசை நாடகம் இன்று வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாக மேடையேறுகிறது.

யாழ் பிரதான வீதியில் திருமறைக் கலாமன்றம் விசேடமாக அமைந்துள்ள மேடையில் மாலை 6.45 மணிக்கு இந்த இசை நாடகம் ஆரம்பமாகும். (இ-51)

## 9 மாவட்டங்களில் இ. தொ. கா. கூட்டாகப் போட்டி

கொழும்பு, ஏப். 2

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் போது தென் பகுதியில் ஒன்பது மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிடும் என்று அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான வேட்பாளர் பட்டியல்களை இரு கட்சிகளும் பூர்த்தி செய்துள்ளன.

தென் மாகாணத்தில் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிடுவது தொடர்பான பேச்சுகள் இன்னும் முடிவடையவில்லை என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

இ. தொ. கா. வேட்பாளர் பட்டியல்கள் அனைத்தும் [illegible] வெளியிடப்படவுள்ளதாக [illegible] தது. (ஒ-எ)


**அமரர் பாலகணேசமூர்த்திக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்**

கொழும்பில் அகால மரணம் அடைந்த திரு. பாலகணேசமூர்த்திஅவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம்.

நான் கிளிநொச்சி அரசாங்க அதிபராகக் கடமை ஆற்றியவேளை அமரர் மூர்த்தி எனது வாகனச் சாரதியாகச் சேவை ஆற்றினார். அன்னார் கடமை உணர்வுடனும், சேவை உள்ளத்தோடு, திறமையாகவும், விசுவாசமாகவும், நேர்மையாகவும் பணிபுரிந்தார். அவரின் மறைவு எமக்கு ஈடுசெய்ய முடியாத ஓர் பேரிழப்பாகும்.

நானும் எனது குடும்பத்தினரும் அமரர் மூர்த்திக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்தி, அவரின் ஆன்மா இறைவன் பாதங்களில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கா. மாணிக்கவாசகரும்
(அரச அதிபர்)
குடும்பத்தினரும்

சுண்டிக்குளி.

(25053)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி லில்லி பொன்னம்மா பொன்னு

(இளைப்பாறிய தலைமை ஆசிரியை)

குடத்தனையைச் சேர்ந்த திருமதி லில்லி பொன்னம்மா பொன்னு 31-03-1993இல் காலமாகிவிட்டார். இவர் திரு. ஏ. வி. பொன்னு (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி தேவி நல்லருளானந்தம் (வெள்ளவத்தை), திருமதி புஷ்பராணி மதியாபரணன் (தெகிவளை), திரு. P. ஜெயராசா (அபுதாபி), திரு P. ஜெயசிங்கம் (சிங்கப்பூர்), திரு P. ஜெயசுந்தர் (ஜேர்மனி), திருமதி புஷ்பசாந்தி ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு K. நல்லருளானந்தம், திரு. பி. மதியாபரணன், திருமதி ரதி, திருமதி ரூபினி, திருமதி ரஞ்சினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 01-04-1993 வியாழக்கிழமை மாலை 3-30 மணிக்கு குடத்தனை இல்லத்தில் நடைபெற்றது. உற்றார் உறவினர் அனைவரும் இவ் வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
புஷ்பசாந்தி பொன்னு-
குடத்தனை.
(25049)

### நாகநாதி நல்லதம்பி

புங்குடுதீவு கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், 9ஆம் வட்டார கிராமசபை நீண்டகால அங்கத்தவரும், உதவித்தலைவரும், பிரபல சமூக சேவையாளருமாகிய திரு. நாகநாதி நல்லதம்பி 31-03-1993இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திருமதி சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், செல்லாச்சி, முத்துதம்பி, சுந்தரம் பிள்ளை மற்றும் பொன்னுத்துரை (கல்மடு), நாகமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நாகராசா மற்றும் சொர்ணம்மா, தங்கம்மா, கோமதியம்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் இரத்தினலிங்கம் (அன்னலிங்கம்) ஆகியோரின் அருமை மாமனாருமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (02-04-1993) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இல. 400, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் வீதி இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனம் செய்வதற்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி இரத்தினலிங்கம்
(கோமதியம்மா மணி)
400, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(25047)

### திருமதி எல்லைகாவேத நல்லநாச்சன் தம்பிஐயா

கரணவாய் நவிண்டிலை பிறப்பிடமாகவும், தொல்புரம் கண்டாமையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிஐயா எல்லைகாவேத நல்லநாச்சன் 01-04-93 இல் காலமானார்.

இவர் சுழிபுரத்தைச் சேர்ந்த அமரர் முத்துக்குமாரு தம்பிஐயாவின் அருமை மனைவியும், சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி ஆசிரியைகளான திருமதி அரியமலர் சற்குணசிங்கம், செல்வி இந்திரா தம்பிஐயா ஆகியோரின் அன்புத் தாயாரும், பன்னாலையைச் சேர்ந்த மயில்வாகனம் சற்குணசிங்கம் அவர்களின் அன்பு மாமியாரும், செல்வன் ஆதித்தனின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 02-04-93 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
இ. த. விக்னராசா
(சட்டத்தரணி)
(பெறாமகன்)
கண்டாமை,
தொல்புரம்,
சுழிபுரம்.
(25055)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

அகில இலங்கை கம்பன் கழகம்
நடத்தும் இவ்வாண்டுக்கான

# கம்பன் விழாவின்

முதலாம் நாளான இன்று

## விருது பெறும் சான்றோர்கள்

### பண்டிதர் இ. நமசிவாய தேசிகர்

வித்துவசிரோமணி கணேசையரின் தலைமாணாக்கர் என்ற பெருமைக்குரிய அறிஞர் பெருமகன் இலக்கண



வித்தகர் நமசிவாய தேசிகர் ஆவார்.

கணேசையரின் பதிப்பு முயற்சிகளின்போது அவருக்குத் துணைநிற்கும் பெருவாய்ப்புப் பெற்றவர். ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு. கைலாசபதி போன்ற அறிஞர் பெருமக்களிடம் கற்கும்பேறு வாய்க்கப் பெற்றவர்.

கணேசையரிடம் கற்கும் காலத்திலேயே, ஐயரவர்களின் ஏனைய மாணவர்களுக்குத் துணையாசிரியராக அமர்ந்ததும், பிற்காலத்தில் வகுப்புக்களைப் பொறுப்பேற்று நடத்தப் பொருத்த மானவர் என்று கணேசையர் அவர்களால் இனங்காணப் பட்டதுமான பெருமைகள் இவருக்குரியன.

இன்று கௌரவிக்கப்பெறும் பண்டிதர் மு. கந்தையா, பண்டிதர் ச. பொன்னுத்துரை ஆகிய அறிஞர்களுக்கும் ஆசிரியராக விளங்கியவர்.

தலைசிறந்த அறிஞர்களுக்கு நன்மாணவராயும், தகுதி வாய்ந்த மாணவர்க்கு ஆசிரியராயும் அமர்ந்தபேறு ஒன்றே இவர்தம் தகைமைக்குத் தக்க சான்றாக அமையும்.

இவரின் தகுதிகண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1980இல் ''இலக்கண வித்தகர்'' எனும் பட்டத்தை வழங்கிப் பெருமை செய்தது.

சந்நிதிக் கந்த சதகம், நகுலேச திருவந்தாதி முதலான நூல்களையும், பதிகம், திருப்பள்ளி எழுச்சி, ஊஞ்சல் முதலானவற்றையும் பத்திமையோடு பாடியுள்ளார்.

அமரர் கம்பகலாநிதி, பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் நினைவுப் பரிசில் இவருக்கு இன்று வழங்கப்படுகிறது.

முறையாகப் பயின்றவர்

மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், பல நிறுவனங்கள் நடத்தி வந்த பண்டிதர், சித்தாந்த வகுப்புக்களிலும் கற்பித்த நல்லாசிரியர்

குழந்தைவேல் சுவாமிகளும் குருபரம்பரையும், மாவை பிள்ளைத்தமிழ், சித்தாந்த விளக்கில் சைவக்கிரியைகள், நாவலர் பிள்ளைத்தமிழ், சித்தாந்தச் செழும் புதையல், அரியவும் பெரியவும், சிவஞான சித்தித் திறவுகோல், திருக்கேதீஸ்வர மான்மியம்

தமிழ் கற்பித்த தகைமையாளர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களின் உற்ற நண்பர். மதுரைத் தமிழ பண்டிதரான இவர், சென்னைப் பல்கலைக்கழகத்தில் கற்று ''வித்துவான்'' பட்டத்திற்கும் உரித்துடையவரானார்.

தமிழ் மணிமாலை உரை, புலோலி சிவன் பதிற்றுப்பத்தந்தாதி, செல்வச்சந்நிதி அந்தாதி முதலான நூல்களின் ஆசிரியருமாவார்.


பாலபண்டித, பண்டித

பத்து ஆண்டுகள் மல்லாகத்தில் நடத்திய பண்டித வகுப்பிலும், பின் நாவலர் பாடசாலை, நல்லை ஆதீனம் என்பவற்றின் பண்டித வகுப்புக்களிலும் நன்மாணாக்கர் பலரை உருவாக்கிய பேராளன்.

வெறும் கல்வியோடு நின்றுவிடாது. இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவரெனும் பொறுப்பான பதவியை இருபத்தைந்து ஆண்டு காலம் வகித்து அச்சங்கத்

றிய அனைத்து மாணவரிலும் முதலாமவராகச் சித்தி பெற்ற பெருமைக்கு உரியவர்.

சிறப்புச்கலைமாணி, கல்வியியல் டிப்ளோமா, முதுத்தத்துவமாணி ஆகிய பட்டங்கள்



இலண்டன் பல்கலைக்கழகத்தில் இவர் பெற்றுக்கொண்டவை.

பிரபல கல்லூரிகளில் ஆசிரியராகவும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் முதலாந்தர விரிவுரையாளராகவும் கடமையாற்றிய இவர், இலங்கை வானியற் கழகத்தின் உபதலைவராகவும், இலண்டன் அரசவானியற் கழக உறுப்பினராகவும் விளங்கியவர்.

மாவை முருகன், ஆனந்தத் தேன், கல்வி பயிற்றலின் விதிகள், தமிழ் ஒலி மூலங்களின் சிறப்பியல்பு முதலான நூல்களோடு, சிறந்த ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றையும் எழுதியுள்ளார்.

''யாழ் நூல்'' ஆய்வில் சுவாமி விபுலாநந்தருக்குத் துணை நிற்கும் பேறும் பெற்றவர்.

திருகோணமலை, கழகப் புலவர் அமரர் பெ. பொ. சிவசேகரம் நினைவுப் பரிசில் இன்று இவருக்கு வழங்கப்படுகிறது.

## "மகர யாழ்" விருது பெறும் மாண்புமிகு மனிதர்



தாம் சார்ந்த துறையினூடு தியாக உணர்ச்சியோடும், இனப்பற்றோடும், மனிதாபிமானத்தோடும், இம்மண்ணுக்காகத் தொண்டாற்றி,

எமது

இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்

டாக்டர்

**சபாரத்தினம் சிவகுமாரன் M.D., F.R.C.P.P.**

அவர்களுக்கு இவ்வாண்டுக்குரிய

**"மகர யாழ் விருது"**

வழங்கப்படுகிறது.

முதலான வசனநடை செய்யுள்நடை நூல்களின் ஆசிரியர், சில நூல்களின் உரையாசிரியரும் ஆவார். நாவலர் குரல் எனும் மாதாந்த சஞ்சிகையின், பத்திராசிரியராகவும் இருந்துள்ளார்.

இவருடைய பணிகளுக்காக 1990 இல் இலங்கையரசு, சாகித்திய மண்டலப் பரிசினை வழங்கிக் கௌரவித்தது.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசி ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நினைவுப் பரிசில் இவருக்கு இன்று வழங்கப்படுகிறது.

பரீட்சைக்குரிய வினாத்தேர்வுகளில் இவரின் பங்கு விதந்துரைக்கத்தக்கது

தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களை திருக்குறள், கம்பராமாயணம் போன்ற இலக்கியங்களை விரும்பிக் கற்பதிலும், விளங்க உரைப்பதிலுமே பேரின்பம் காணும் இயல்பினர்

அவருக்கு அமரர் ''கம்பனடிப் பொடி'' சா. கணேசன் நினைவுப் பரிசில் இன்று வழங்கப்படுகிறது.

தைத் திறம்பட இயக்கிய செயல் வீரரும் ஆவார்.

அவருக்கு பண்டிதமணி சி.



கணபதிப்பிள்ளை நினைவுப் பரிசில் இன்று வழங்கப்படுகிறது.

### சி. சிவஞானசுந்தரம்

ஈழத்திலே 30 ஆண்டு காலமாகத் தொடர்ந்து வெளிவருவதும், நகைச்சுவைக்கும், கருத்தோவியங்களுக்கும் முதன்மை கொடுக்கும் தனித்துவமுடையதும், இயல்பான ஈடுபாடு உடைய வாசகர் பலரைத் தன்பால் கொண்டதுமாக விளங்கும் 'சிரித்திரன்' என்ற மாதாந்த சஞ்சிகையை யாழ்ப்பாண மண்ணில் இருந்தே வெளிக் கொணரும் ஒரு தனிமனித நிறுவனம் என்று புகழ்ந்துரைக்கத் தக்கவர் திரு. சி. சிவஞானசுந்தரம் அவர்கள்

சிந்தனைத் திறனும், சமூக நோக்கும். எழுத்தாற்றலும் ஓவியத்திறனும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர், பல பத்திரிகைகளிலும் வரைந்த கருத்தோவியங்களால், பத்திரிகை உலகில் தன்னையோர் கருத்தோவியராக நிலைநிறுத்திக் கொண்டவர்.

'சுந்தர்' எனும் பெயரில் பத்திரிகைகளில் வெளிவந்த சவாரித்தம்பர் சித்திரகானம் முதலான இக் கருத்தோவியத் தொடர்களுக்காகவே பத்திரிகைகளை நாடும் இரசிகர் குழாம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டவர்.

இவரது 'சிரித்திரன்' சிரித்திரக் கொத்துக்கு'' 1991 இல இலங்கை அரசு சாகித்ய...



பரிசை வழங்கியபோது. அதனை நிராகரிக்கும் மனவைராக்கியம் வாய்ந்து விளங்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### ஏழாலை, பண்டிதர் மு. கந்தையா

தலைசிறந்த சைவசித்தாந்த அறிஞர்களுள் ஒருவரும், தமிழ்ப் பண்டிதருமாக விளங்குபவர். சமஸ்கிருதத்தைச் சிறப்புப்பாடமாகப் பயின்ற கலைமாணிப் பட்டதாரி. ஆங்கிலம், பாளி ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி மிகுந்தவர்.

தமிழ் இலக்கிய, இலக்கணங்களை வித்துவ சிரோ



மணி கணேசையர் அவர்களிடமும், சைவ சித்தாந்தத்தைச் சித்தாந்த அறிஞர் அருணானந்தசிவம் அவர்களிடமும்

### தும்பளை, பண்டிதர் க. கிருஷ்ணபிள்ளை

இந்த நாட்டிலே இலக்கிய இலக்கணங்களைத் துறைபோகக் கற்ற ஒரு சிலருள்



குறிப்பிடத்தக்க ஒருவர் இவர்.

தான் பிறர்வாய் நுண்பொருள் கண்டு பிறர்க்கு எண்பொருளவாகச் செலச் சொல்லும் நல்லறிவாளர்.

இன்று கௌரவிக்கப்படும் பண்டிதர் க. சச்சிதானந்தம் எனும் அறிஞர் பெருமகனுக்கு ஆசிரியராக அமர்ந்து

### மட்டுவில், பண்டிதர் ச. பொன்னுத்துரை

சான்றோராகவும், இலக்கணத்தைக் கூட ஆரவாரம் எதுவும் அற்று. அதேநேரத்தில் அழகாகவும், தெளிவாகவும் கற்பிக்கக்கூடிய கல்வியாளராகவும், செயல் வீரராகவும், தண்ணளியும், சாந்தமும் வாய்க்கப் பெற்ற பண்பாளராகவும் விளங்கும் ஒருவர், மட்டுவில் ச. பொன்னுத்துரை அவர்கள்.

அவர், ஈழத்தின் இருபெரும் அறிஞர்களான மகாலிங்கசிவம் அவர்களிடமும் வித்துவ சிரோமணி கணேசையர் அவர்களிடமும் தமிழை முறையாகக் கற்கும் பெருவாய்ப்பு வாய்க்கப் பெற்றவர். வடமொழி அறிவு கண்டவர்.

1946 இல் மதுரைப் பண்டிதர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய இலங்கை இந்திய மாணவர்கள் அனைவரிலும் முதல் மாணவனாகச் சித்தியடைந்து தாய் நாட்டுக்கும், தனக்கும் புகழ் சேர்த்த பெருமையாளன்.

ஏழாலை, மல்லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்திலும் நடேஸ்வர வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய காலத்திலும் —

### மாவிட்டபுரம், பண்டிதர் க. சச்சிதானந்தன்

பாரம்பரிய மரபுமுறைக் கல்வியும், மேலைத்தேய வழி வந்த நவீனமுறைக் கல்வியும் வழிவழி மேம்பாட்டு தமையும் வாய்த்த மாண்பாளர் மாவிட்டபுரம், பண்டிதர் க சச்சிதானந்தன் அவர்கள்.

தன் தந்தையாரிடம் மரபு ரீதியான தமிழ்க் கல்வியைப் பெறும் பேறு பெற்றவர். தந்தையாரிடமேயன்றி நவநீத கிருஷ்ண பாரதியார், வித்துவான் கார்த்திகேயபிள்ளை பண்டிதர் கிருஷ்ணபிள்ளை ஆறுமுகம் உபாத்தியாயர் ஆகியோரிடமும் இவருக்குத் தமிழ்க் கல்வி வாய்த்தது

சிவப்பிரகாச தேசிகர், சுப்பிரமணிய சாஸ்திரிகள் இராமையர், வேதாகமபூஷணம், கு. பாலசுந்தரக் குருக்கள் ஆகியோரிடம் வடமொழிக் கல்வி வாய்த்தவர்.

மதுரைத் தமிழ்ப் பண்டித பரீட்சைக்கு 1941இல் தோற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

சித்தன்கேணி சந்திக்கு 150 யார் தொலைவில் 2 பரப்பு காணியுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட கல்வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ராணி, ''தர்மபவனம்'', சித்தன் கேணி.

(25035)

## இலவச திருமண சேவை

34 வயது, பூராடம். கனடாவில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள் ஞாயிறு காலையில். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.

(25004)

## தவறிவிட்டது

சென். பற்றிக்ஸ் வீதிக்கும்- ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் லண்டன் வங்கிக்கான பவுண்ட் 39 50 காசோலை (Draft) ஒன்றும், பொறியியல் நிறுவனம் ஒன்றின் படிவங்களும், புத்தகமும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பற்றீஷன் தொழில் பயிற்சி நிறுவனம், இல 59, சென். பற்றிக்ஸ் வீதி அல்லது ஐ. சூரியகுமாரன், பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு. (மொத்தக் கொள்வனவு விற்பனை நிலையம் முன்பாக) என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(25045)

28 - 03 - 1993 இல் பூநகரி நல்லூரில் படகுச் சேவை காரியாலயத்திற்கு முன்பாக சில பொருள்களுடன் கறுப்பு, வெள்ளை நிற பின்னல் கூடை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். திருமதி அ. முருகேசம்பிள்ளை, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

(25039)

## பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டுகள் 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக் கல்வி, ஆங்கிலப் பாடங்களுக்கான வினாத்தாள்கள் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, யாழ்ப்பாணம். (சி-4584)

## புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதத்திலும் 2ஆவது, 4 ஆவது ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஊக்குவிப்புப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4583)

## A/L மாதிரி வினாத்தாள்

A/L விஞ்ஞானம், வர்த்தகம், கலை, கணிதப் பிரிவுகளுக்கான அனைத்துப் பாடங்களுக்கும், மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, யாழ்ப்பாணம். (சி 4582)

## PHARMACIST

10 - 04 - 1993இல் ஞானக் குழந்தை இல்லத்தில் ஆரம்பமாகவிருக்கும் மருந்தாளர் பயிற்சி பாட நெறி (External Pharmacist)க்கு ஆன பாடவிதானம் பற்றி பயிலுவோருக்கு வெளிப்படுத்துவதற்கு 03 - 04 - 1993இல் இருந்து 06 - 04 - 1993 வரை பிற்பகல் 1 மணி தொடக்கம் 3மணி வரை சமுகம் கொடுக்கவும். ஞானக் குழந்தை இல்லம், யாழ்ப்பாணம். (சி-4869)

## பெற்றுக் கொள்ளவும்

அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தின்போது, ''ஜெகன் போட்டோ''வினரால் எடுக்கப்பட்ட யாழ். மாவட்டப் பாடசாலைகளின் பரிசில் பெற்ற மாணவர்களின் புகைப்படங்களை பெற்றுக் கொள்ளவும். ''ஜெகன் போட்டோ'' 399, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4726)

## சித்திரம்

ஆண்டு - 11 க. பொ. த (சா/த) பரீட்சைப் பாடத்திட்டப்படி தயாரித்தவர்; ''யசோ'' சித்திரக் கல்வி ஆலோசகர் அளித்த மதிப்புரை கொண்டது. பரபரப்பாக விற்பனையாகிறது.

(25040)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் (ஒப்பந்த அடிப்படையிலான) விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 93-04-16 வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

ரூபா 3295/- மாதமொன்றுக்கு (நிலையானது)

**தகைமைகள்:**

சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்ப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் தகைமை பெற்றதிலிருந்து குறைந்த பட்சம் மூன்றாண்டு அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் 20/- ரூபாவைச் செலுத்தி இப் பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் இதர விவரங்களையும் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் எடுக்கப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற 23 x 10 ச. மீ. அளவுடைய கடித உறையொன்றை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் செய்யப்படும் விண்ணப்பம் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள் நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவற்ற முறையில் விவரங்கள் குறிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
[illegible]

(சி-4861)

## University of Jaffna
## Shri Lanka

### EXTERNAL EXAMINATION 1991/92

FIRST IN ARTS
FIRST IN COMMERCE
GENERAL ARTS PART-I
SPECIAL ARTS DEGREE PART-I
COMMERCE PART - 1

Examination Entry forms will be received from registered candidates. who wish to sit the above examination scheduled to commence in August/ September 1993

Examination Entry forms could be obtained from the External Examinations and Registration Unit, University of Jaffna in person or by post from 02-04-1993

Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Shroff, Finance Branch of the University of Jaffna for the payment of Rs 15/-. Those who wish to obtain the forms by post are required to send a money order/Postal order for 15/- drawn in favour of Bursar, University of Jaffna together with a self addressed envelop affixing stamp to the value of Rs 12/-.

Completed Examination Entry forms should be submitted to the External Examinations & Registration Unit on or before 15-05-1993.

— REGISTRAR.

University of Jaffna. (C-4864)

# திருமண அழைப்பு

பங்குனி 21 ஆம் நாள் 03-04-1993 சனிக்கிழமை
பகல் 12-10 — 1-55 மணி வரையுள்ள
மக நட்ஷேத்திரத்தில்,

| எமது புத்திரன் திருநிறை செல்வன் **இராமதாஸ்** அவர்கட்கும் | எமது புத்திரி திருநிறை செல்வி **மேனகா** அவர்கட்கும் |
|---|---|

இணுவில் அரசோலை பிள்ளையார் கோவிலில் திருமணம் நடைபெறும். அத்தருணம் அன்பர்கள் அனைவரும் குடும்ப சமேதராக சமுகம் தந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

| | |
|---|---|
| நாதஸ்வர வித்வான், | தவில் வித்வான், |
| K. R சுந்தரமூர்த்தியும் - | திருமதி இராமநாதன், |
| பாரியாரும், | (ராமு) |
| இணுவில். | தாவடி. |

[இருவீட்டார் அழைப்பு]

(25018)

## யாழ்ப்பாண மாநகரசபை

# ஆதனவரி தொடர்பான அறிவித்தல் - 1993

பொது மக்களின் வேண்டுகோளுக்கமைய ஆதன வரி செலுத்துதல் தொடர்பான கால எல்லைகள் கீழ்க் கண்டவாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

★ 1993 1ஆம் கந்தாய வரியினை தண்டமின்றி 30 - 06 - 1993 வரை செலுத்த முடியும்.


★ 1993 ஆம் ஆண்டுக்குரிய முழுவருட வரியினையும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி 10% வரிக்கழிவினையும், 1ஆம் கந்தாய வரியினை தனித்து செலுத்துவதன் மூலம் 5% வரிக்கழிவினையும் பெற்றுக் கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
31 - 03 - 1993

(சி-4863)

# ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் சண்முகம் வைத்திலிங்கம்**
(பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 31 — 01 — 1913 | 14 — 03 — 1992 |

திதி: 02 - 04 - 1993

ஓ!... எங்கள் அருமை அப்பா!
பாசத்தோடும் நேசத்தோடும் எங்களை
ஆளாக்கிய உத்தமரே!
ஆண்டு ஒன்றல்ல — ஆயிரமானாலும் கூட
எங்கள் நெஞ்சிருக்கும் வரை நினைவிருப்பீர்கள்!
தங்கள் ஆத்மா பேரா இயற்கைப்
பெரும் பேறடைவதாகுக!

தங்கள் பாசமுள்ள:
- குடும்பத்தினர்.

82, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(25034)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தமிழீழம் அமைக்க தரிசனம் கண்டவர் செல்வா

## நன்றி வழிபாட்டில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 2

''சுதந்திர தமிழீழத்தை எமது மண்ணில் அமைக்க வேண்டும் என்பது தந்தை செல்வா கண்ட தரிசனமாகும்.''

அமரர் தந்தை செல்வாவின் 95ஆவது பிறந்த தினத்தை ஒட்டி யாழ்ப்பாணம் புனித யோவான் ஸ்நாநகன் ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நன்றி செலுத்தும் வழிபாட்டில் தலைமை வகித்த இலங்கை கிறிஸ்த்வ இறையியல் கல்லூரித் தலைவர் அருட்திரு டானியல் எஸ். தியாகராஜா இவ்வாறு கூறினார்

''தந்தை செல்வா ஈழத் தமிழரின் இதய ஒளியாகவும், நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்கினார்'' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வழிபாட்டு நிகழ்ச்சியில் புகழ் அஞ்சலி உரை நிகழ்த்திய தென்னிந்திய திருச்சபைப் பேராயர் அருட்திரு. டி. ஜே. அம்பலவாணர், ''தந்தை செல்வா ஈழத்தமிழ் மக்களின் சுதந்திர வாஞ்சையை எழுப்பி விட்டவர்; தமிழ் மக்களின் கண்களை திறந்து விட்டவர்'' என்று கூறினார்.

நிகழ்ச்சியில் அருளுரை வழங்கிய யாழ். கத்தோலிக்கப் பேராயக் குரு முதல்வர் அருட்திரு கலாநிதி. எஸ். ஜே. இம்மானுவேல், ''தந்தை செல்வா அரிதான அரசியல் தேசத் தலைவரும், மதப் புனிதரும் ஆவார். தந்தை செல்வா தன்னலமற்ற வாழ்வு வாழ்ந்த ஒரு மறைஞானி'' என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியத்தால் இந்த வழிபாட்டு நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது.

புதன்கிழமை காலை யாழ். கோட்டையில் அமைந்திருக்கும் தந்தை செல்வா நினைவாலயத்தில் மலரஞ்சலி செலுத்தும் வைபவமும் நடைபெற்றது.

(அ-க)

# 3 தமிழ்க் கட்சிகள் பிரட்மனுடன் பேச்சு

கொழும்பு, ஏப். 2

ஜனாதிபதி பிரேமதாஸாவின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் மூன்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை கடந்த வாரம் கொழும்பில் சந்தித்துப் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள ஆராய்ச்சி நிலையம் ஒன்றில் இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு எம். சிவசிதம்பரம், எம். பியான மாவை சேனாதிராஜா, ''புளொட்'' இயக்கத்தைச் சேர்ந்த திரு. த. சித்தார்த்தன், ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்த எம். பியான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் எல். கேதீஸ்வரன் ஆகியோரும், உத்தியோக மொழிகள் ஆணைக்குழுத் தலைவர் டெஸ்மண்ட் பெர்னாண்டோ, மார்கா இன்ஸ்டிடியூட் பணிப்பாளர் கொட்பெறி குணதிலக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சுகளில் தாம் தனிப்பட்ட ரீதியில் கலந்து கொண்டதாகவும்—

அக் கூட்டம் சம்பிரதாயமற்ற முறையிலானது என்றும் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தவற்றை தான் கவனமாக மட்டும் கேட்டதாகவும் அவர் சொன்னார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறிய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் — அது முறைப்படியானதல்லதாக இருந்தும் — திரு. வீரக்கோன் போன்ற முக்கிய பிரமுகர் ஒருவர் கலந்துகொண்டது விந்தையானது என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்கூட்டத்தில் பங்குபற்றிய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மீதான நம்பிக்கையை நாம் இழந்திருப்பினும், பேச்சுவார்த்தைக்கு இன்னும் நாம் தயாராக இருக்கின்றோம் என்று திரு. பிரட்மன் வீரக்கோனிடம் தெரிவித்தனர்.

(உ-எ)

# கம்பன் விழா இரண்டாம் நாள் நிகழ்வுகள்

அகில இலங்கை கம்பன் கழகத்தின் கம்பன் விழா இரண்டாவது நாள் நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு செல்வி பரமேஸ்வரி கணேசனின் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பமாகும்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இன்றைய விழாவின் தொடக்கவுரையை கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை நிகழ்த்துவார்.

அதையடுத்து இடம்பெறும் ''சுழலும் சொற்போரில் இராமன் பெருமையைப் பெரிதும் வெளிக்கொணர்ந்தவர் விசுவாமித்திரன் அல்ல கைகேயியே என திரு. க. நாகேஸ்வரன், கைகேயி அல்ல பரதனே என திரு. சி. சிவலிங்கராஜா, பரதன் அல்ல குகனே - திரு. இரா. செல்வவடிவேல், குகன் அல்ல அனுமனே - திரு. தி. திருநந்தகுமார், அனுமன் அல்ல விபீடணனே - திரு. த. சிவகுமாரன், வீபீடணன் அல்ல விசுவாமித்திரனே - திரு. ஆறு. திருமுருகன் ஆகியோர் வாதிட திரு. இ. ஜெயராஜ் மத்தியஸ்தராக பணியாற்றுவார்.

மாலை நிகழ்ச்சிகள் பி. ப. 4-30 மணிக்கு திரு. எஸ். சிதம்பரநாதன் குழுவினரின் மங்கள இசையுடனும் சங்கீத பூஷணம் நா. வி. மு. நவரத்தினத்தின் கடவுள் வாழ்த்துடனும் ஆரம்பமாகும். யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையுரை நிகழ்த்துவார், வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தொடக்கவுரை நிகழ்த்துவார். பின் ''வியத்தகு வீரம் செறிந்த நாடு அயோத்தியா? கிஸ்கிந்தையா? இலங்கையா?'' என்ற தலைப்பிலான பட்டி மண்டபம் நடைபெறும் பேராசிரியர் அ. சண்முகதாஸ் நடுவராகப் பணிபுரிவார்.

(க-111)

# நோய் நிவாரணி தூதுவளை

தூதுவளை கீரை வகையைச் சேர்ந்தது, இது இருமலைக் குறைக்கும்; தொண்டைக் கம்மல், அரிப்பு, உடல் வலி, பித்தம் போன்ற வியாதிகளைப் போக்கும்; பசியை உண்டு பண்ணும்.

ஆகவே நோயற்ற வாழ்வுக்கு தூதுவளையை உணவில் சேர்க்கவேண்டும்.

தூதுவளைச் சம்பலும் சுண்டலும் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்த ருசியான சாப்பாடாகும்.

# முதலாம் தவணை விடுமுறை

கொழும்பு, ஏப். 2

நாட்டில் உள்ள தமிழ் மற்றும் சிங்கள அரச பாடசாலைகள் அனைத்தும் முதலாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் 8 ஆம் திகதி மூடப்பட்டு மே மாதம் 3 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது.

(த-எ)

# தாயகக் கோட்பாடு: தீர்க்க தரிசனமாக வெளியிட்டவர் யோகர் சுவாமிகள்

## இன்று அவரது குருபூசை

ஈழத்துச் சித்தர் பரம்பரையிலே முத்தாக விளங்குகின்றவர் சிவயோக சுவாமிகள். சமயங் கடந்த சமரச ஞானியாகவும் சிவதொண்டர்க்குச் சிவகுருவாகவும் விளங்குபவர். 1872இல் தோன்றி 1964இல் மகாசமாதி அடைந்த யோக சுவாமிகள் தலை சிறந்த ஞானக்கவிஞருமாவர். இந்த வகையில் செந்தமிழை வளர்த்த சீரியர்.

இன்று தமிழர்கள் ஒரே குரலில் எழுப்பும் வடக்கையும் கிழக்கையும் இணைக்க வேண்டும் என்னும் கோரிக்கையைச் செயற்படுத்திக் கிழக்கே செங்கலடியிலும், வ[illegible] யாழ். நகரிலும் சிவதொண்டன் நிலையங்களைத் தாபித்தவர். ஈழத் தமிழரின் கோரிக்கையை நிறைவு செய்யாத சோல்பரிப் பிரபுவினது மகனைச் சந்தசுவாமி என ஆக்கிக் கிழக்கிலங்கை நிலையப் பொறுப்பாளராக்கியவர்.

''பஞ்சம் படை வந்தாலும் பார் எல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களெடி'' எனப் பாடியதுமன்றி ''நாடும் ஈழத்து நற்றமிழ் நாடனே'' எனத் தமிழீழத் தாயகக் கோட்பாட்டை தீர்க்கதரிசனமாக வெளியிட்டவருமாவர்.

ஜேர்மன் சுவாமி கௌரிபாலா, அமெரிக்க சுவாமி [illegible] மார்க்கண்டு சுவாமி முதலியோரின் குருவாக விளங்கிய சிவயோக சுவாமிகள் நல்லூர்ச் செல்லப்பா சுவாமிகளின் நேர் சீடராவர்.

ஒரு பொல்லாப்பும் இல்லை; எப்பவோ முடிந்த காரியம்; நாம் அறியோம்; முழுதும் உண்மை என்பன நான்கு பெரிய உபதேசங்களாகும். ''நாங்கள் சிவனடியார்கள் எங்களுக்கு ஒரு குறைவுமில்லை. சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில். அதற்காகவே நாங்கள் பூமியில் வாழ்கிறோம்'' என மொழிந்த யோக சுவாமிகள் சமயங் கடந்த ஞானியுமாவர்.

— ஓர் அடியவன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

---

உதயன்

## விழாவும் விருதும்

அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் வருடாந்தம் நடத்தும் கம்பன் விழா நல்லூரில் இன்று கோலாகலமாக ஆரம்பமாகிறது. ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கும் இந்தப் பெருவிழாவில் இலக்கியத் தேன்மழை பொழியப் போகிறது. இன்றைய இளம் சமுதாயத்தினர் மத்தியில் இலக்கிய ஆர்வத்தையும் அறிவையும் வளர்க்க இது போன்ற விழாக்கள் பெரிதும் துணை செய்யும்.

தமிழ்த் தேசியம் வளர்வதற்கு தமிழின் வளர்ச்சி அவசியம். அதன் சிறப்பும் பெருமையும் பேணப்பட்டாலே மேற்கொண்டு அதனை வளர்க்க இயலும். இன்பத் தமிழின் இனிமை தெரிந்தாலே அதனை மாந்தவும் நயமறியவும் ஆர்வமும் ஆசையும் பிறக்கும். தமிழின் இனிமையைப் பருகுவதற்கு தமிழ் இலக்கியங்களில் தேர்ச்சியும் புலமையும் தேவை.

அந்த வகையில் கம்பன்விழா போன்று பல இலக்கிய விழாக்கள் தமிழ்ப் பிரதேசங்களில் அடிக்கடி நடத்தப்பட வேண்டும். எந்தத் துறையாயினும் சரி, அத்துறையில் புலமை பெற்றவர்களின் அறிவு மற்றவர்களுக்குப் பயன்படுவதற்கு, பரவுவதற்கு நயம்பட, நினைவில் நிலைக்க ஆற்றப்படும் சொற்பொழிவுகள் இலகுவில் உதவுகின்றன. நூல்களிலிருந்து பெற்ற அறிவைப் பட்டை தீட்டிக் கொள்ள இலக்கிய சொற்பொழிவுகளும் விழாக்களும் மிகப் பெரிய அளவில் உதவும்.

ஆகையால் இலக்கிய விழாக்கள் வருடத்தில் ஒரு முறை அன்றி, ஒரிடத்தில் அன்றி, பல தடவைகள், தமிழ்த்தேசத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம், பட்டி தொட்டிகளில் எல்லாம் நடைபெற வேண்டும். கம்பன் கழகத்தின் முன்னுதாரணம் ஏனைய அமைப்புகள், கழகங்களாலும் பின்பற்றப்பட வேண்டும். அப்போது தான் தெய்வத் தமிழின் மணம் பரம்பலாம். தமிழர் பண்பாடுகள் மறைந்து போகாது காத்து, அவற்றினால் தமிழை அணி செய்து தமிழ்த் தேசியத்தைச் செழுமையுறச் செதுக்க முடியும்.

இன்று ஆரம்பமாகும் இலக்கியப் பெருவிழாவில் இந்தப் பிரதேசத்தில் தமிழை — இலக்கியத்தை, இலக்கணத்தை — வளர்க்க அரும்பாடுபட்ட, தமிழ்த் தொண்டு புரிந்த பெரியோர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிப்பதும் மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழ்ப் புலவர்களைக் கௌரவிப்பதும் அவர்களுக்குப் பரிசில் வழங்குவதும் தமிழ் அன்னையைக் கௌரவிப்பதாகக் கருதி அன்றைய புரவலர்கள் தமது சொத்துக்களை அள்ளி அள்ளிக் கொடுத்தார்கள்.

இன்றைய விழாவில் ''மகரயாழ்'' விருது வழங்கப்படும் சிறப்பு நிகழ்வு புதிய முயற்சி. எங்கள் மத்தியில் தொண்டுள்ளம் படைத்தவர்களையும், சான்றோர்களையும் உருவாக்க வதற்கு உதவும் நல்ல முயற்சியாகும். இலைமறை காயாக இருந்து மனம் நிறைந்து தொண்டு செய்யும், பிரசாரம் விரும்பாது தன்னடக்கத்துடன் மக்கள் சேவை புரியும் வைத்திய கலாநிதி சிவகுமாரன் போன்றவர்களின் தொண்டுக்கு மதிப்பும் கௌரவமும் அளிப்பதுமாகும். அவரைப் போன்றவர்கள் கௌரவிக்கப்படும் போது ''மகரயாழ்'' விருதும் மதிப்புப் பெறுகிறது. ஓர் அரசாங்க அதிகாரியின் கடமைக்கு அப்பாலும் சென்று மனதார மக்கள் சேவை செய்வோருக்கு அரச கௌரவம் செய்யாத தமிழர்கள் என்பதால் புறக்கணிக்கும்போது அதனை ஈடு செய்ய வேண்டிய பொறுப்பு மக்கள் அமைப்புகளையே சார்கின்றது.

---

## இன்று

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மாணவர் மன்றம் இன்று காலை 10 மணிக்கு யோகர் சுவாமிகளின் குருபூசை தினத்தைக் கொண்டாடுகின்றது நிகழ்ச்சியில் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரை நிகழ்த்துவார். (க-17)

o o o

இன்று கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலையில் இந்து மாமன்றத் திருமுறை விழா நடைபெறுகின்றது. ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தால் கல்கத்தா ராமகிருஷ்ணமிஷன் கலாசார நிறுவனத்தின் 6நூல் தொகுதிகள் விழாவில் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

(க)

## ஆலயங்களில்

கொக்குவில் - நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை மணவாளக் கோலத் திருவிழா நடைபெறுகின்றது.

வீ. கே. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்களின் விசேட மேளக் கச்சேரியும் திருமதி பார்வதி சிவபாதத்தின் இன்னிசைக் கச்சேரியும் இவ்விழாவில் இடம்பெறும்.

o o o

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பணபாட்டுப் பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு திரு. மீ. கோவிந்தராஜா குழுவினரின் மேளக் கச்சேரி இடம் பெறும். (க)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 2

உரும்பராய் — ஊரெழு விளையாட்டுக் கழகங்களின் ஒன்றியத்தினரால் நடத்தப்படும் காட்சி உதைபந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

பிற்பகல் 3 மணிக்கு ஊரெழு றோயல் எதிர் அளவெட்டி விநாயகர் வி. க.

பி. ப. 4மணிக்கு:- நாவாந்துறை சென். மேரிஸ் எதிர் பாஷையூர் சென். அன்ரனீஸ்.

o o o

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நாவாந்துறை கலைவாணி மைதானத்தில் நடந்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளி மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:—

★ சுன்னாகம் ஸ்கந்தா எதிர் யங் ஹென்றியன் (பி.ப. 3.30 மணிக்கு)

★ கலைவாணி எதிர் சென். நீக்கிலஸ் 'பி' (பி. ப. 4.30 மணிக்கு) (ஒ-3)

## நாளை

இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியும் சுன்னாகம் இறைமக்கள் ஆய்வகமும் ஒழுங்கு செய்துள்ள திரித்துவக் கோட்பாடு எனும் பொருள் பற்றிய கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள தென் இந்திய திருச்சபை நகர்ப்பணியில் நடைபெறும்.

பேராயர் அருட்திரு. டி. ஜே. அம்பலவாணர், கலாநிதி அருட்திரு. ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

(க-161)

---

### கம்பன் விழாவில்..!

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிய இனப்பற்றாளன்.

விடுதலைப் புலிகளின் ''மாமனிதர்'' விருதுக்கு உரித்தான பெருமைக்குரியவர்.

பேராசிரியர் க. கைலாசபதி நினைவுப் பரிசில் இன்று இவருக்கு வழங்கப்படுகிறது.

★

# குடும்ப அட்டைக்கு மீண்டும் ம.எண்ணெய்

மக்களுக்கு மற்றொரு முறை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக, குடும்ப அட்டைக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப் படும்.

''நில்மினி'' கப்பல் மற்றொரு தொகுதி மண்ணெண்ணெயுடன் இன்று பருத்தித்துறை வந்து சேர இருப்பதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் இருந்து இறக்கப் படும் மண்ணெண்ணெய் பருத்தித் துறையில் வைத்தே ப.நோ.கூ. சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். அதற்கான ஏற்பாடுகளை யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு செய்திருப்பதாக அறியவந்தது.

ப.நோ.கூ. சங்கங்கள் தமக்குக் கிடைக்கும் மண்ணெண்ணெயை மீண்டும் பங்கீட்டு அடிப்படையில் தத்தம் பகுதியில் குடும்ப அட்டைகள் வைத்திருப்போருக்கு விநியோகிக்கும். (அ-3)

## கல்வி அலுவலகத்துக்கு ஓட்டோ

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ். கல்வி அலுவலகத்தின் பாவனைக்காக 'ஓட்டோ' வாகனம் ஒன்று கல்வி அமைச்சால் வழங்கப் பட்டுள்ளது.

இந்த வாகனம் அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்துசேரும் 'குமண' கப்பலில் எடுத்து வரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 6 கோட்டங்களுக்கும், கல்வி அலுவலகத்துக்கும் ஒவ்வொரு ஓட்டோ வழங்கும் திட்டத்தின் கீழ் கல்வி அலுவலகத்துக்கான ஓட்டோவே தற்சமயம் வருகின்றது.

(இ-3)

## கனடாவில் கோஷ்டி மோதல்

# வீதியில் பதுங்கி நின்று துப்பாக்கிச் சமர்!

கனடாவின் ரொறொன்ரோப் பகுதியில் உள்ள ஸ்காபரோ என்ற இடத்தில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற கோஷ்டி மோதலின் போது வீதியில் வாகனங்களின் பின்னால் பதுங்கி நின்று இரு கோஷ்டியினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தமிழ்க் கோஷ்டிகளுக்கிடையில் நிகழ்ந்த இம் மோதல் குறித்து கனடாவின் பிரபல நாளிதழ் ''ரொறொண்டோ ஸ்ரார்'' செய்தி வெளியிடுகையில் இப்படியான வீதிச் சண்டையை இதற்கு முன் கண்டதே இல்லை' என்று ஆச்சரியம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள குறிப்பிட்ட இரு ஊர்களைச் சேர்ந்த கோஷ்டிகளே மோதிக்கொண்டன என்றும் யாழ்ப்பாணத்தில் பல வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பகைமை ஒன்றின் தொடர்ச்சியே இந்த மோதல் என்றும் கூறப்படுகிறது.

இந்த இரு ஊர்களையும் சேர்ந்தவர்கள் இரு கோஷ்டிகளாகப் பிரிந்து மோதிக் கொள்ளும் சம்பவங்கள் அண்மைக்காலமாக கனடாவில் ஆங்காங்கே நடந்து வந்தன.

ஒரு குறிப்பிட்ட ஊரைச் சேர்ந்த கோஷ்டி ரொறொன்ரோ நகரின் தியேட்டர் ஒன்றின் முன்னால் நின்று கொண்டு, திரைப் படம் பார்த்துவிட்டு வந்த இலங்கைத் தமிழர்களில் மற்றைய ஊரைச் சேர்ந்தவர்கள் எவராவது உள்ளனரா என்று விசாரித்துக் கொண்டிருந்ததாகவும் —

அதே போன்று மற்றைய ஊரைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் கோஷ்டியினர் ரொறொன்ரோவில் உள்ள மதுபான விடுதி ஒன்றுக்குள் புகுந்து எதிர் கோஷ்டியினரைத் தேடியதாகவும் கூறப்படுகிறது. (இ-எ)

## மேலும் 6 ப.நோ.கூ.ச. கிளைகளில்

# அரிசி, பால்மா விநியோகம் நாளை முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 2

குடாநாட்டு மக்களுக்கு அரிசியை நியாய விலையில் வழங்குவதென்ற திட்டப்படி ஏற்கனவே வழங்கப்பட்ட பல. நோ. கூ. சங்கங்கள் தவிர்ந்த ஏனைய சங்கங்களுக்கு ஊடாக, குடும்பம் ஒன்றிற்கு மூன்று கிலோ அரிசியும், ஆறு மாதத்திற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு 400 கிறாம் லக்ரோஜன் பால்மாவும் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர், நீர்வேலி, சங்கானை, மானிப்பாய், சுன்னாகம் ஆகிய ப. நோ. கூ. சங்கங்களிலேயே இந்த விநியோகம் நாளை சனிக்கிழமை முதல் ஆரம்பமாகிறது. நான்கு நாட்களுக்குள் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது.

குத்தரிசி ஒரு கிலோ 30 ரூபா லக்ரோஜன் (400 கிராம்) பால் மா 80 ரூபா (94 பெப்ரவரி வரை பாவிக்கக் கூடியது) (ஒ)

# நினைவஞ்சலி



## றெஜினோல்ட் சுகந்தன் இன்னாசித்தம்பி

சில்லாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்தியர் றெஜினோல்ட் சுகந்தன் இன்னாசித்தம்பி அவர்களின் நினைவாக சித்திரை 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ் புனித அடைக்கல மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இன்னாசித்தம்பி குடும்பத்தினர்.

(25019)

## பொருள் விலை மேலும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப். 2

குடாநாட்டில் உணவுப் பொருள்களின் விலைகளில் மேலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

வெளிச் சந்தைகளில் நேற்று சீனி கிலோ 40 ரூபாவாகவும் மா கிலோ 18 ரூபாவாகவும், வெள்ளைப் பச்சை அரிசி கிலோ 21 ரூபாவாகவும், 400 கிறாம் லக்ஸ்பிறே 65 ரூபாவாகவும் விற்கப்பட்டது.

(இ-17)

## 2 முஸ்லிம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் இருவரும் கடந்த 19 ஆம் திகதி இரவு புல்மோட்டைக் கடற் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் ஸ்ரீ லங்காப் படையினர் அப்பகுதிக்கு வந்தனர் என்றும் —

அச் சமயம் படகில் இருந்த பிரஸ்தாப இரு முஸ்லிம் மீனவர்களும் தமது விளக்கை உயரத்தில் பிடித்துக் காட்டினர் என்றும் —

ஆனால், படையினர் உதாசீனமாக அவர்களது பீரங்கிப் படகால் மீனவர்களின் படகை மோதிய போது படகு சேதமடைந்தது என்றும் —

அப்போது கடலில் குதித்த மேற்படி இருவரும் 3 நாட்கள் நீந்தி ஒருவாறு முல்லைத் தீவை வந்தடைந்தனர் என்றும் —

அவர்களை முல்லைத்தீவு மக்கள் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் பருத்தித் துறையில் வைத்தும் மன்னார்ப் பகுதியைச் சேர்ந்த மூன்று முஸ்லிம் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே.

(ஓ)

## 6 'புளொட்'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தனர்.

அச்சமயம் விடுதலைப் புலிகள் அவர்கள் மீது வேக அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

அப்போது புளொட் தேச விரோதிகள் அறுவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவரான மட்டக்களப்பைச் சேர்ந்த காளி என்றழைக்கப்படும் காளிதாசன் என்பவரின் சடலத்தையும் புலிகள் கைப்பற்றினர்.

அவர்களிடம் இருந்து ரி 81 ரகத் துப்பாக்கிகள் — 4, அவற்றிற்குரிய ரவைக் கூடுகள் — 13, நடுத்தர ரவைகள் — 102, ஏ. கே. ஹோல்சர் — 1 என்பன கைப்பற்றப்பட்டன.

இந்த அதிரடி நடந்த அதே சமயம், ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் இரு காவலரண்கள் மீதும் விடுதலைப் புலிகள் ஆர். பி ஜி. தாக்குதலை நடத்தினர். இதனால் படையினரின் இரு காவல் அரண்களும் தகர்ந்து நிர்மூலமாகின. படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றித் தெரியவரவில்லை.

(ஓ)

## ஜீ.சி.ஈ உயர்தர வகுப்பு ஆசிரியருக்கு கருத்தரங்கு

விலங்கியல், பௌதிகம், தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செய்முறைக்கருத்தரங்குகளை தேசியக் கல்வி நிறுவனமும் கல்வித் திணைக்களமும் இணைந்து நடத்தவுள்ளன.

விலங்கியல் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 5 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும்—

பௌதீக ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 8 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக பௌதிகத் துறையிலும்—

கணித ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் மே 1 ஆம் திகதி வரை 4 நாட்கள் யாழ். பல்கலைக்கழக கணித புள்ளிவிவரவியல் துறையிலும் நடைபெறும்.

இக்கருத்தரங்குகளில் ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பில் மேற்படி பாடங்களைக் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

## கம்பன் விழா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோவில் மேற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் விழா நிகழ்வுகள் நடைபெறும்.

''மகரயாழ்'' விருது வழங்குதலும், மற்றும் ஆறு தமிழறிஞர்களுக்கு பரிசில்கள் வழங்குதலும் இன்றைய விழாவின் பிரதான நிகழ்வுகளாக அமையும். ''கம்பகளஞ்சியம்'' நூல்வெளியீடும் கழகம் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

(விருது, பரிசில்கள் பெறுவோர் விவரம் கொண்ட சிறப்பிதழ் 3ஆம் பக்கத்தில்)

## வழிப்போக்கர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலையை விட்டு விலகிய வயதுள்ள இளைஞர் கோஷ்டிகளே பல இடங்களிலும் இந்தச் சேட்டையில் ஈடுபட்டதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கிறார்கள். இவர்கள் வாளிகளிலும் கலன்களிலும் தெளி திரவங்களைக் காவித் திரிந்து மற்றவர்கள் மீது வீசினர்.

ஏப்ரல் முட்டாள் தின நையாண்டியும், சேட்டையும் வரம்பு மீறியதால் பல இடங்களில் கைகலப்புகள் நடைபெறும் அளவுக்கு நிலைமை மோசமாகியதாகவும் அறிய வந்தது.

யாழ். நகரப் பகுதியில் ஏப்ரல் முட்டாள்தின துன்புறுத்தலில் ஈடுபட்ட பலர் தமிழீழக் காவல்துறையினரால் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அறியவந்தது. (அ-143-161)

## பொலீஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரிடம் கையளித்ததைத் தொடர்ந்தே தர்மசேன கருணாரத்தினா கட்டாய லீவில் அனுப்பப்பட்டார்.

விசாரணையை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் —

கொம்பனித் தெரு பொலீஸ் நிலையப் பொறுப்பு அதிகாரி, பத்திரிகையாளர் மீது தாக்குதலை நடத்த உத்தரவிட்டிருந்தார் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இத்தகவல்களை ஜனாதிபதியின் வெளியுறவுச் செயலாளர் பிரட்மன் வீரக்கூன் வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் நேற்று வெளியிட்டார். (இ-எ)

# மரண அறிவித்தல்

கந்தரோடை

## திருமதி வேலும்மயிலும் விசாலாட்சிப்பிள்ளை

கந்தரோடையைச் சேர்ந்த திருமதி வேலும்மயிலும் விசாலாட்சிப்பிள்ளை அவர்கள் 1-4-93 நேற்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. வேலும்மயிலும் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி கமலாம்பிகை தர்மலிங்கம், திருமதி சரஸ்வதி தர்மலிங்கம், திரு. வே. குமாரசாமி, திருமதி அன்னலட்சுமி வன்னித்தம்பி (அவுஸ்திரேலியா), திரு. வே கைலாயநாதன் (U. K) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. விஸ்வநாதர் தர்மலிங்கம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மானிப்பாய்த் தொகுதி), டாக்டர் மு. வன்னித்தம்பி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி சித்திரலேகா இராமச்சந்திரன் (U. S. A.), டாக்டர் ம. இராமச்சந்திரன் (U. S. A.), திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன், டாக்டர் வ. கதிர்காமத்தம்பி (அவுஸ்திரேலியா), இராமேஸ்வரன், மீனாம்பிகை ஆகியோரின் அன்புப் பேத்தியும், கௌரி, நந்தன், வாணி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கந்தரோடை ''காமதேனு'' இல்லத்தில் இன்று 2-4-93 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. குமாரசாமி
(மகன்)

''காமதேனு'',
கந்தரோடை,
சுன்னாகம்.

(25058)

மேலும் மரண அறிவித்தல்கள் 2ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்)டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292 2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02-04-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org